அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை:15/2007(IV)

எனது இலக்கம்:EST-6/LOANS/04/1040
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.12.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரச அலுவலர்களுக்கு வங்கிகள் ஊடாக சொத்துக் கடன் மற்றும் வாகனக் கடன் வழங்குதல்**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2007.06.12 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/2007, 2009.11.18 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/2007(I), 2014.12.26 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/2007(II) மற்றும் 2015.09.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/2007(III) பால் தங்களது கவனத்துக்கு தயவுடன் கொண்டு வருகின்றேன்.

02. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/2007 நடைமுறைப்படுத்தப்பட்ட 2007.06.15 ஆந் திகதி முதல் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/2007, 15/2007(I), 15/2007(II) மற்றும் 15/2007(III) இன் ஏற்பாடுகளின் கீழ் இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் எதிர்வரும் காலங்களில் வழங்கப்படவுள்ள சொத்துக் கடனிற்காக அறவிடப்பட வேண்டிய வட்டி விகிதம் 2021.01.01 ஆந் திகதி முதல் அமுல்நடாத்தப்படும் வகையில் பின்வருமாறு திருத்தியமைக்கப்படும்.

| கடன் தொகை (ரூபா.) | அலுவலரினால் செலுத்தப்பட வேண்டிய வட்டி சதவீதம் | அரசினால் செலுத்தப்பட வேண்டிய வட்டி சதவீதம் | வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி சதவீதம் |
|---|---|---|---|
| சொத்துக் கடன் | | | |
| 500,000 வரை | 3.0% | 5.5% | 8.5% |
| 500,001 தொடக்கம் 1,000,000 வரை | 6.0% | 2.5% | 8.5% |
| 1,000,001 தொடக்கம் 3,000,000 வரை | 7.0% | 2.0% | 9.0% |
| வாகனக் கடன் | | | |
| வாகனக் கடனிற்கான வட்டி அறவிடல் | முன்னரைப் போன்றே அறவிடப்படல் வேண்டும். | | |

03. இச்சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு